1970 மார்ச் 25]

விவசாயத் துறையிலும் மற்றத் துறையிலும் இருக்கின்றவர்களை அனுப்புகின்ற செயற்குறிப்பு இருக்கின்ற காரணத்தால் அனுப்புகின்றோம். விவசாயத்தைத் தனிச் சிறப்புக் கல்வியாக எடுத்துப் படிக்கின்றவர்களைத்தான் அனுப்புகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 540—மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Arrests of rice mill owners at Madurai

*541 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Minister for Food and Commercial Taxes be pleased to state:

(a) whether a number of rice mill owners in Madurai has been arrested in December 1969; and

(b) the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) திண்டுக்கல்லில் திரு. ஓ. எஸ். கண்முகவேலு என்ற அரிசி அரைவை ஆலை உரிமையாளர் 12-12-1969 அன்று கைது செய்யப்பட்டார்.

(ஆ) இதுகுறித்துப்பல புலனுய்வுகள் நடந்து கொண்டிருப்பதால் விவரங்கள் தருவது உசிதமல்ல என்று கருதப்படுகிறது.

THIRU K. VINAYAKAM: Sir, what is the alleged offence committed by this mill-owner, for which he has been arrested?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட நெல்லை அரைத்து, அரிசியாகத் தரும்போது குறிப்பிட்ட சதவிகித அரிசி கொடுக்கப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. அம்மாதிரி குறிப்பிட்ட சதவிகித அரிசி கொடுக்கப்படவில்லை. மேலும், அரசாங்கத்தின் சார்பிலே இருக்க வேண்டிய ஸ்டாக்கும் அவரிடம் இல்லாமல் குறைந்திருந்தது. ஆகவே, அவர் கைது செய்யப்பட்டார்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் கைது செய்யப்பட்டிருக்கிறாரே அவர் மொத்தம் 12 லட்சம் ரூபாய் மோசடி செய்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறதே, அந்த 12 லட்சம் ரூபாயை ஒரே நாளில் மோசடி செய்துவிட முடியாது. தொடர்ந்து ஓராண்டு, இரண்டு ஆண்டுகளில் செய்து வந்ததாகவும் அந்த மோசடிக்கு உறுதுணையாக அதிகாரிகள் சிலர் இருந்ததாகவும் சொல்லப்படுகிறதே, அவர்களின்மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? 12 லட்சம் ரூபாயை மோசடி செய்தவர் சிலரென்று கைது செய்யப்பட்டு, பின்னர் வெளியே வந்துவிட்டாரே, அது எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் மொத்த மோசடி 12 லட்சம் ரூபாய் அல்ல. 7,42,374 ரூபாய் மோசடி செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள்மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட நெல்லை ரைஸ் மில்காரர்கள் பூரணமாக அரைத்து குறிப்பிட்ட சதவிகித அரிசியைக் கொடுத்தார்களா? அப்படிக் குறிப்பிட்ட சதவிகித அளவு கொடுக்காமல் எத்தனை ரைஸ் மில்காரர்கள் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து நெல்லைப் பெற்றுக்கொண்டு, அரைத்து, அரிசியாக மாற்றி இத்தனை சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று ரைஸ்மில்காரர்களுக்கு கூறப்பட்டிருக்கிறது. 64.5 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக 64 சதவீதம் என்று வைத்தோம். அந்த அளவு கொடுக்காமல் குறைவாகக் கொடுத்தார்கள். அரசாங்கத்தின் சார்பில் இருக்க வேண்டிய ஸ்டாக்கும் இல்லாமல் குறைந்திருந்த காரணத்தினால்தான் கைது செய்யப்பட்டார். மொத்தம் குறிப்பிட்ட சதவிகித அளவு கொடுக்காத நபர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்டார்கள். அந்த எண்ணிக்கை பற்றிய தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலை உரிமையாளர் யார் என்பதை இந்த மன்றம் அறியலாமா? யார் பொறுப்பில் கைது செய்யப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்டவருடைய பெயர் திரு. ஓ. எஸ். சண்முகவேலு. அவர் உயர்நீதிமன்றத்தால் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

விருதுநகர் பள்ளிகளில் மதிய உணவுக்கான அரிசி

***542 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு, வரி-வணிகத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் 1968 ஆகஸ்ட் மாதத்தில், பள்ளிகளில் மதிய உணவுக்காகப் போடப்பட்டு வந்த அரிசி நிறுத்தப்பட்டதா?

(இ) ஆம் எனின், அதன் காரணம் என்ன?

(உ) அதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.